உ
சிவமயம்

# என்னதான் நடக்குது உலகத்திலே?

# பரலோகம்

**இ. லம்போதரன் MD**

**சைவ சித்தாந்த பீடம்**

www.knowingourroots.com

**பரலோகம்** என்னும் சொல் சமய ஆன்மீக உரையாடல்களிலும் நூல்களிலும் அடிக்கடி பாவிக்கப்படுகின்ற ஒரு சொல்.

**பரலோகம் என்றால் என்ன?**
**பரலோகம் எங்கே இருக்கின்றது?**
**பரலோகத்தின் தன்மை எப்படிப்பட்டது?**
**பரலோகத்தில் என்ன இருக்கின்றது? அங்கு யார் இருக்கின்றார்கள்?**
**நாம் பரலோகத்துக்குச் செல்லலாமா? அங்கு எப்படிச் செல்வது?**

இப்படி பல வினாக்களும் ஐயங்களும் பரலோகத்தைப்பற்றிப் பேசும்போது பலருக்கும் எழக்கூடும்?

**பரலோகம் பற்றிய இந்த வினாக்களுக்கு எங்கே விடை கிடைக்கும்? யாரிடம் கேட்கலாம்?**

தமிழிலே இதற்கு ஓர் கூற்று சொல்லுவார்கள்.
**" கண்டவர் விண்டிலர்; விண்டவர் கண்டிலர்."**
அதாவது பரலோகத்தைக் கண்டவர்கள் அதைப்பற்றிச் சொன்னதில்லை; பரலோகத்தைப் பற்றிச் சொன்னவர்கள் அதைக் கண்டதில்லை.

ஆயினும் பரலோகம் பற்றிய தகவல்களை ஞானநூல்களில் காணலாம்.

**யார் எழுதிய ஞான நூல்கள்?**

ஏற்கனவே சொன்னதுபோல், பரலோகத்தைக் கண்டவர் யாரும் அதைச் சொன்னதில்லை. ஆகவே மனிதர்கள் செய்த நூல்களில் பரலோகம் பற்றிய விபரங்களைத்தேடுவது வீண்.

**அப்படியானால் பரலோகம் பற்றிய விபரங்களை எங்கே தேடுவது?**

பரலோகத்தைப் பற்றிய விபரங்களை பரலோகத்தின் அதிபதியாகிய இறைவனே சொன்ன நூல்கள் இருக்கின்றன. அவர் சொன்ன நூல்களை **வேதம்** என்பர். அதிலும் சிறப்பான தகவல்கள் உள்ள நூல்களை **ஆகமங்கள்** என்பர். இரண்டையும் சேர்த்து **வேதாகமம்** என்றும் சொல்வதுண்டு. மூவுலங்களைப் பற்றியும் அவை மூன்றுக்கும் அப்பாலான பரலோகம் பற்றியும் சைவத்தில் இறைவன் அருளிய எமது வேத, ஆகம நூல்கள் கூறுகின்றன.

இந்த நூல்கள் ஆரம்பத்தில் எழுதப்படாமல் வாய்வழியாகவே வழங்கிவந்தன. இதனால் இவற்றை **எழுதா மறை** என்றும், **எழுதாக் கிளவி** என்றும் பழந்தமிழ் நூலான **தொல்காப்பியம்** கூறுகின்றது.

பின்னாளில் இவை எழுத்துருப்பெற்றபோது இந்திய துணைக்கண்டத்தின் அறிஞர்களின் அக்காலத்துப் பொதுமொழியான சமஸ்கிருதமொழியில் எழுத்துருப்பெற்றன.

இவற்றில் உள்ள தகவல் பலவற்றை அழகு தமிழில் திருமுறைகளிலும் ஏனைய சைவ நூல்களிலும் ஆங்காங்கே பதிவு செய்துள்ளனர்.

இவற்றிலே பரலோகம் பற்றிச் சொல்லப்பட்டுள்ள தகவல்களை ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

**பரலோகம் என்றால் என்ன? அது எங்கே இருக்கின்றது?**

நாம் வாழும் பூமி உள்ள அண்டத்தொகுதி பால்வீதி அண்டத்தொகுதி ஆகும். இதை எமது சமய நூல்களில் **பூலோகம்** என்று கூறுவர். இதுபோல் பல பல கோடி அண்த்தொகுதிகள் உள்ளன என்று இன்றைய அண்ட அறிவியல் கூறுகின்றது. இவற்றிலே நாம் வாழும், ஆராயும், கணிக்கும், எதிர்வுக்கூறும் அண்டத்தொகுதிகளின் கூட்டை ஒட்டுமொத்தமாக **பிரகிருதி** என்று எமது ஞானநூல்கள் கூறுகின்றன. நாம் வாழும் பூலோகம் என்னும் பால்வீதி அண்டத்தொகுதியானது எல்லையற்றுப் பரந்து விரிந்திருக்கும் இந்தப் பிரகிருதியின் ஒரு தூசுத்துணிக்கையே.


இந்த பிரகிருதியில் புதிய உலகங்கள் தொடர்ந்தும் தோன்றிக்கொண்டே இருக்க்கின்றன; தோன்றிய உலகங்கள் தொடர்ந்தும் மாறிகொண்டே இருக்கின்றன; கோடிக்கணக்கான வருடங்களாக இருந்த உலகங்கள் பல அழிந்துகொண்டும் இருக்கின்றன. இந்த உலகங்களின் தோற்றத்தை திருவாசகம் பின்வருமாறு வர்ணிக்கின்றது.

**" அண்டப்பகுதியின் உண்டைப்பிறக்கம்**

**அளப்பருந் தன்மை வளப்பெரும் காட்சி**
**ஒன்றனுக்கொன்று நின்றெழில் பகரின்**
**நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன”**

எமது பிரகிருதியின் இயற்கை விதிகளுக்கு அடங்காது ஆனால் எமது பிரகிருதி உலகையும் முழுமையாக வியாபித்து ஊடுருவி அதற்கு அப்பாலாயும் உள்ள இரண்டாவது உலகம் ஒன்று உள்ளது. அந்த உலகினதும், அங்குள்ள இருப்புகளினதும், இருப்பவர்களினதும் இயற்கை நமது பிரகிருதியின் பௌதிக, இரசாயன, உயிரியல் விதிகளுக்கு அப்பாற்பட்டது. இந்த இரண்டாவது உலகை **அசுத்தமாயா உலகு** என்பர். இந்த அசுத்த மாயா உலகம் நமது பிரகிருதியை ஊடறுத்து வியாபித்து அதற்கு அப்பாலாயும் இருந்தாலும் அதன் இருப்பும், இயக்கமும் நமது அறிவு, புலன்கள், கணிப்புகள், எதிர்வுகூறல்களுக்கு அப்பாற்பட்டவை.

இதற்கும் மேலாக இந்த பிரகிருதி மாய உலகம், அசுத்தமாயா உலகம் இரண்டையுமே நீக்கமற வியாபித்து, ஊடுருவி, அதற்கு அப்பாலாயும் இருப்பது மூன்றாவ்து உலகமான **சுத்தமாயா உலகம்**. இந்த சுத்தமாயா உலகு  பிரகிருதி மாயா, அசுத்த மாயா உலகங்களையெல்லாம் ஊடுருவி வியாபித்து அப்பாலாயும் இருந்தாலும் இதன் இருப்பும், இயக்கமும், இயற்கையும் மற்ற இரண்டு உலகங்களின் விதிகள், பார்வைகள், கணிப்புகளுக்குப் புலனாகாது அப்பாற்பட்டவை.
இந்த பிரகிருதி மாயா உலகம், அசுத்த மாயா உலகம், சுத்த மாயா உலகம் ஆகிய மூவுலகங்களையும் நீக்கமற வியாபித்து, ஊடுருவி, அவற்றுக்கு அப்பாலாயும் பரந்து விரிந்து எல்லையற்று இருப்பது **பரலோகம்.** ஆயினும் பரலோகத்தின் இருப்பும், இயக்கமும், இயற்கையும் இந்த மூவுலகங்களின் கணிப்புக்கும், பார்வைக்கும், அறிவுக்கும் அப்பாற்பட்டது.




**பரலோகத்துக்கும் இறைவனுக்கும் என்ன தொடர்பு?**

பரலோகத்தின் அதிபதி இறைவனே. மூவுலகங்களிலும் இறைவன் நீக்கமற வியாபித்திருந்தாலும் இறையின் வீடு அல்லது இல்லம் பரலோகமே. இது நெய்யானது பாலிலும், தயிரிலும் இருந்தாலும் வெண்ணெயில் திரண்டு இருப்பது போல் எனலாம். இறவனின் வீடாகிய இந்தப் பரலோகத்தை அடைவதையே **வீடுபேறு** என்கின்றனர். இந்தப் பரலோகத்தையே வடமொழியில் இதை முக்தி என்பர்.

இந்த பரலோகத்தில் உள்ள இறை, நாம் எமது வீட்டில் மிகவும் இயல்பாக, சுயமாக, இயல்புநிலையில் இருப்பதைப்போல் தன்னிலையில் சுயரூபத்துடன் இருக்கின்றது. இவ்வாறு தனது இல்லத்தில், தன்னிலையில், சுயரூபமாக இருக்கும் இறையின் நிலையை **சொரூப நிலை** என்பர்.

சொரூபம் என்பது  சுயரூபம். இவ்வாறு சுயநிலையில் உள்ள இறைக்கு எந்த வடிவமும் கிடையாது. அது அருவமும் இல்லை; உருவமும் இல்லை;

அருவுருவமும் இல்லை. அதற்குப் பெயர் கிடையாது. அடையாளம் கிடையாது. இவ்வாறு தன்னிலையில், அதாவது சுயமான, இயல்பான சொரூப நிலையில் உள்ள இறையை சைவம் **தற்சிவம்** என்றும் **பரசிவம்** என்றும் சைவம் கூறும்.

**பரமசிவன், பராசக்தி, பரப்பிரம்மம், பரமாத்மா, பரஞ்சோதி, பரம்பொருள், பரமானந்தம், பரங்கருணை** என்று பலவிதமாகக் கூறப்படுவதும் எல்லா பதங்களும் குறிப்பது இந்த **பரசிவமே.** இவ்வாறு சொரூப நிலையில் உள்ள இறை அந்நிலையிலும் எம்மீது காட்டும் எல்லையற்ற நிபந்தனையற்ற வரையறையற்ற அன்பை சைவம் **பராசக்தி** என்று கூறுகின்றது.

**...................................................பதி பரமே, அதுதான்**
**நிலவும் அரு உரு இன்றிக், குணம் குறிகள் இன்றி,**
**நின்மலமாய், ஏகமாய், நித்தமாகி,**
**அலகில் உயிர்க்கு உணர்வாகி, அசலம் ஆகி,**
**அகண்டிதமாய், ஆனந்தவுருவாய், அன்றிச்**
**செலவரிதாய்ச், செல் கதியாய்ச், சிறிதாகிப், பெரிதாய்**
**திகழ்வது தற்சிவம் என்பர் தெளிந்து ளோரே.**

*நின்மலமாய் - மலங்களற்றதாய்;*
*அலகில் உயிர்க்கு உணர்வாகி - எண்ணிலி உயிர்களுக்கு அவற்றின் உணர்வாகி*
*அசலம் - சலனம் இல்லாதாய்;*
*அகண்டிதமாய் - எங்கும் வியாபித்து;*
*செலவரிதாய் - சென்றடைவதற்கு அரியதாயும்;*
*செல்கதியாய் – அதேசமயம் சென்றடைய வேண்டிய இலக்காயும் உள்ளது.*

**- மெய்கண்ட சாத்திரம், சிவப்பிரகாசம் -13ம் பாடல்**

**சிவன் அரு உருவும் அல்லன்; சித்தினோடு அசித்தும் அல்லன்;**
**பவமுதல் தொழில்கள் ஒன்றும் பண்ணிடு வானும் அல்லன்;**
**தவம்முதல் யோக போகம் தரிப்பவன் அல்லன்; தானே**
**இவைபெற இயைந்தும், ஒன்றும் இயைந்திடா இயல்பி னானே**.

*சித்து - அறிவுள்ளது;*
*அசித்து - அறிவற்ற சடம்;*
*பவம் முதல் தொழில்கள் - படைத்தல் முதலான தொழில்கள்.*

**- மெய்கண்ட சாத்திரம் – சிவஞானசித்தியார்**
**– 90வது பாடல்**

**ஊரிலான், குணங் குறியிலான், செயலிலான், உரைக்கும்**
**பேரிலான், ஒரு முன்னிலான், பின்னிலான், பிறிதோர்**

**சாரிலான், வரல் போக்கிலான், மேலிலான், தனக்கு**
**நேரிலான், உயிர்க் கடவுளாய் என்னுளே நின்றான்.**
**- கந்த புராணம் - 1784**

**இறையின் வீடான பரலோகம் எமது உலகங்களில் இருந்து எவ்வாறு வேறுபட்டது?**

நாம் வாழும் பிரகிருதி மாயா உலகமும், நம்மிலும் மேலான உயிர்கள் வாழும், அசுத்த மாயா, சுத்த மாய உலகங்களும் மாயையினால் ஆன சடப்பொருட் கூறுகளே. விஞ்ஞான அறிவியல் இச் சடப்பொருட் கூறுகளை மூலகங்கள் என்றும், அணுக்கள் என்றும், அணுக்களின் கூறுகளான இலத்திரன், புரோத்தன், நியூத்திரன் முதலான துணிக்கைகள் என்றும், இவறையெல்லாம் கட்டி இயக்கும் சடசக்தியென்றும் கூறுகின்றது. விஞ்ஞானம் இவ்வாறு 118 மூலகங்களே எமது பிரகிருதி உலகின் ஆக்கக்கூறுகள் எனக் கூறுகின்றது.

இது போல் சைவம் 36 தத்துவங்களே இந்த மூவுலகங்களை ஆக்கும் கூறுகள் என்று கூறுகின்றது. ஆனால் இந்த மூவுலகங்களுக்கும் அப்பாற்பட்ட பரலோகமானது இவ்வாறு சட மூலகங்களினாலோ 36 தத்துவங்களினாலோ ஆனவை அல்ல. அவை இறையின் அறிவும் உணர்வும் உள்ள **சிற்சக்தி**யினால் ஆனவை; அவற்றை இயக்குவதும் சட சக்தி அல்ல; இந்த சிற்சக்தியே. 36 தத்துவங்களுக்கும் அப்பாற்பட்ட இந்த இறையை **தத்துவ +அதீதன் = தத்துவாதீதன்** என்று சைவம் கூறுகின்றது.

மாயையின் சடப்பொருட் கூறுகளால் ஆன மூவுலக இருப்புகளுக்கு அதீதமான, அப்பாற்பட்ட இந்தப் பரசிவத்தின் இருப்பை **பரலோகம்** என்றும், இந்த இருப்பை அடைவதை **பரகதி** என்றும் **பரமுத்தி** என்றும் கூறுவர். இதுவே கிரேக்க மொழியில் **பர-தீஸ்** என்றும், ஆங்கிலத்தில் **பரடைஸ்- paradise -** என்றும் கூறப்படுகின்றது. இங்குள்ள கைலாசம் **மஹாகைலாசம்** எனப்படும்.

- **மஹா கைலாஸ நிலயாயை நமஹா –**

மகா கைலாசத்தில் நிலை கொண்டிருப்பவளுக்கு நமஸ்காரம்.

- **ஶ்ரீ லலிதா சகஸ்ரநாமம் - 578**

**இவ்வாறு பரலோக தளத்தில் சொரூப நிலையில்  உள்ள இறை அல்லது பரசிவத்தின் தன்மை என்ன?**

சொரூப நிலையில் உருவம் இல்லாமல், குணம், குறிகள் இல்லாமல் என்ங்கும் வியாபித்துள்ள பரலோக தளத்தில் உள்ள இறைக்கும் எண்குணங்கள் உள்ளன என்று சைவம் கூறுகின்றது. இவையாவன,

**1. ஸ்வ தந்திரன்** - **தனவயத்தன் ஆதல் :** சுவ+தந்திரம்+ சுதந்திரம்**.** இறைவன் ஒருவனே சுதந்திரமானவன். தன்னிலையில் சுயமாக ஒன்றையும் சாராது, ஒன்றிலும் தங்கியிராது,  செயற்டும் சுதந்திரம் உள்ளவன். இதையே தன்வயத்தன் ஆதல் என்கின்றோம்.

**2. விசுத்த தேகன்** - **தூய சரீரம் :-** எமது சரீரம் மாயையை மூலமாகக்கொண்டு படைக்கப்பட்டது; ஆகவே தோன்றி, நின்று, தேய்ந்து அழியும். இறைவனுடைய அன்பும் கருணையாகிய சக்தியே இறைவனுக்கு ஶ்ரீஇரமாகின்றது. இவ்வாறு இறைசக்தியினால் ஆன இறையின் சரீரம் தூயது, தொடக்கம், முடிவு இல்லாதது.

**3. அநாதி போதம் – இயல்பாகவே யாவும் அறிந்தவன்:** கடவுள் இயல்பாகவே எல்லாம் அறிந்தவர். அவரது அறிவு நம்முடைய அறிவு போலப் படிப்படியாக வருகின்ற படிப்பறிவோ அல்லது பட்டறிவோ அல்ல.

**4. சர்வக்ஞன் – முற்றறிவு :** கடவுள் அனைத்தும் அறிந்தவர்.

**அதுஇது என்னாது அனைத்துஅறிவு ஆகும்**
**அதுஇது என்றுஅறிந்து உந்தீபற;**
**அவிழ்ந்த சடையான் என்று உந்தீபற.**

என்கின்றது மெய்கண்ட சாத்திரங்களில் ஒன்றான திருவுந்தியார்.

5. **நிராமயன்** - **இயல்பாகவே தளைகள் இல்லாதவன்**: கடவுள் எதற்கும் கட்டுப்பட்டவர் அல்லர். அவர் உயிர்களாகிய நமக்குள்ள ஆணவம், கன்மம், மாயை என்னும் கட்டுகள் இல்லாதவர். பச் என்றால் கட்டு என்று பொருள். ஆணவம், கன்மம், மாயை என்னும் கட்டுகளை பாசம் என்றும் கூறுவர்.

இறைவன் இயல்பாகவே பாசங்கள் இல்லாதவன். அதனால்தான் அவனுக்கு நிர்மலன், நிமலன், விமலன் என்றெல்லாம் பெயர்கள் உள்ளன.

**6. நித்யானுக்த சக்தி - பேரருள் உடைமை :** இறைவன் அளவற்ற அருளாளன். அளவற்ற அன்பாளன். அவனுடைய எல்லையற்ற. நிபந்தனையற்ற அன்பையே அருள் என்று சொல்லுகிறோம். இந்த அருளையே சக்தி என்று கூறுகின்றோம்.

**7. அநந்த சக்தி- முடிவில் ஆற்றல்**: இறைவன் எல்லாம் வல்லவன்.

**8. நித்யத்ருப்தகன் - வரம்பில் இன்பம் உடைமை** : இறை இன்பமே வடிவானது. ஆனந்த சொரூபி.. இறையை நாடுபவர்களுக்கும் அவ்வாறே இன்பத்தை இறைக்கும் இன்பநிதி, ஆனந்த வாரிதி.

**"ஆராத இன்பம் அருளும் மலை போற்றி"** என்கின்றது சிவபுராணம். எமது **"அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்குபவன்"** அவன். '**சிந்தை மகிழச்**' செய்பவன் அவன்.

**கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்**
**தாளை வணங்காத் தலை**

- **திருக்குறள் 09**

சைவம் கடவுளுக்கு சொல்லும் இந்த எண் குணங்கள் கிறிஸ்தவம், இஸ்லாம், யூத மதம் போன்ற எல்லா மதங்களின் கடவுட் கொள்கைகளுக்கும் பொருந்தி உலக மதங்களின் கடவுட் கொள்கைகளை எல்லாம் ஒருங்கு திரட்டி வைத்தாற்போல் விளங்குகின்றன. இவ்வாறு சைவத்தின் கடவுட் கொள்கைகள் முரண்பாடு களைந்து உலகளாவி நிற்பதால்தான் நாம் "மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என்று சொல்லுகின்றோம்.

**குறிப்பு:**

EIGHT ATTRIBUTES OF THE GOD – எண்குணத்தான்

1. Omnipotent: All powerful
2. Omniscient: Knows everything
3. By nature, God knows everything, (not by education or by experience)
4. By nature, free from any taints/ fetters
5. Pure embodiment (pure form)
6. Independent, never dependent on anything
7. Infinite unconditional unlimited Love (AruL)
8. Infinite Bliss